23-08-2012 **அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : இலங்கையில் பங்குச்சந்தையில் ஏற்பட்ட சரிவின் பின்னணிகள்**

**தொடக்க உரையாடல் : அச்சுதன் சிறீரங்கன்**

பொதுவாகப் பங்குகளை வாங்கி விற்குமிடமே பங்குச்சந்தை ஆகும். இங்கு சிறு முதலீட்டாளர்கள், தரகர்கள் முதல் பெரிய முதலீட்டாளர்கள், தரகர்கள் வரை பங்குபெறலாம்.

பங்குதாரர்களைச் சேர்க்க கம்பனிகள் பங்குகளை வெளியிடுவார்கள். இவ்வாறு வெளியிடப்படும் பங்குக்கு ஒரு குறிப்பிட்ட முகப்பு விலையை (Face Value) நிர்ணயம் செய்வார்கள். இப்பங்கை முகப்பு விலையோ அல்லது அதற்கு மேலோ விலை கொடுத்து வாங்குபவர்கள் பங்குதாரர்கள் ஆவார்.

பங்குச்சந்தையின் உறுப்பினர்களே பங்குத்தரகர்கள் ஆவர். இவர்கள் மட்டுமே, பங்குகளை வாங்க/விற்க (Buy/Sell) நினைக்கும் தனிநபர் அல்லது நிறுவனம் சார்பாகப் பங்கு வணிகம் செய்ய முடியும். இதனால் பங்குகளை வாங்க நினைக்கும் ஒருவர் பங்குத் தரகரை அணுக வேண்டும். இதற்காக முதலீட்டாளர் பங்குதரகரிடம் ஒரு கணக்கை தொடங்க வேண்டும்.

உலக அளவில் ஒப்பிடும்போது இலங்கையின் பங்குச்சந்தை மிகச்சிறியதாக இருப்பதாலும் முதலீடு சொற்பம் என்பதாலும் பங்குச்சந்தையை சிலர் சூழ்ச்சியுடன் கையாள்வது வெளிப்படையாகவே தெரிகிறது. அத்துடன் பாதிப்பும் அதிகமாக இருக்கிறது.

மின்னணுவியல் முறையில் அமைந்த Short Selling வசதி அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே உலக அளவில் பங்குச்சந்தைச் சூழ்ச்சிகள் பெருமளவில் அதிகரித்தது. இலங்கையில் இன்னமும் இந்த முறை அறிமுகப்படுத்தப்படவில்லை.

இலங்கையில் பங்குச்சந்தை திடீரெனச் சரிவடைந்ததற்குப் பல்வேறு பின்னணிகள் இருந்தாலும் அவற்றுள் முக்கியமான ஒன்றாக சூழ்ச்சியுடன் பங்குச்சந்தையைக் கையாண்டமையைக் குறிப்பிடலாம்.

> "அரசும் ஒருசில தனிமனிதர்களும் நிறுவனங்களும் பங்குச்சந்தையில் சூழ்ச்சியில் ஈடுபடுவதால் பங்குச்சந்தையின் மொத்த அசைவையும் அவர்களால் கட்டுப்படுத்த முடிகிறது. இவர்களே பங்குச்சந்தை மாஃபியாக்களாக உருவெடுக்கிறார்கள்."

அரசும் ஒருசில தனிமனிதர்களும் நிறுவனங்களும் பங்குச்சந்தையில் சூழ்ச்சியில் ஈடுபடுவதால் பங்குச்சந்தையின் மொத்த அசைவையும் அவர்களால் கட்டுப்படுத்த முடிகிறது. இவர்களே பங்குச்சந்தை மாஃபியாக்களாக உருவெடுக்கிறார்கள். இத்தகைய மாஃபியாக்களை அடையாளம் கண்டு வெளிப்படுத்த முனைந்தமையாலேயே பங்குச்சந்தையின் தலைவராக இருந்த திலக் கருணாரத்ன பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்கொண்டு பதவி விலவேண்டி ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. தற்போது இவரது இடத்திற்கு அரசாங்கத்துக்குச் சார்பான ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதும் கவனிக்கத் தகுந்தது.

சில நிறுவனங்கள் தம்மிடம் பெரிய சொத்து இருப்பதாகப் பொய்கூறிக்கொண்டு பங்குச்சந்தைக்கு வருகின்றன. வந்து, தம் நிறுவனப்பங்குகளை அதிக விலைக்குச் சூழ்ச்சிகள் மூலம் உயர்த்துகின்றன. பின்பு தாமே பங்குகளின் விலைகளை வீழ்ச்சியடையச்செய்கின்றன. இதன் மூலம் இலாபம் சம்பாதித்துக்கொண்டு பங்குச்சந்தையை விட்டு வெளியேறுகின்றன.

பங்குச்சந்தையில் அரசு செய்யும் முதலீடுகளிலும் துஷ்பிரயோகங்கள் செய்யப்படுகின்றன.

**மிகுதி அடுத்த பக்கம்**

**அடுத்து வரும் தலைப்புக்கள்**

**உலக வங்கியும் சர்வதேச நிதி நிறுவனமும்**
த. வி. ரெஷாங்கன் | 30-08-2012

**இலங்கையில் வர்க்கக் கட்சி ஒன்றைக் கட்டியெழுப்புவதில் உள்ள சவால்கள்**
சி. கா. செந்திவேல் | 06-09-2012



ஞானப்பிரகாசர்

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் (ஆகஸ்ட் 30, 1875 - ஜனவரி 22, 1947) பன்மொழிப் புலவர்; தமிழின் தொன்மையை உலகிற்கு எடுத்தியம்பியவர்களுள் ஒருவர். இலத்தின், கிரேக்கம் முதலாய பதினெண் மொழிகளில் எழுதவும், பேசவும் வல்லவராய் இருந்தார். பல தமிழ் நூல்களின் ஆசிரியர்.

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்ற தமிழும் ஆங்கிலமும், எழுதுவினைஞராக கடமையாற்றிய போது கற்ற சிங்களமும், யாழ். குருமடத்தில் கற்ற இலத்தீன், பிரெஞ்சும் அவரை பல மொழிகளையும் கற்றிடத் தூண்டியது. மொழிகளுக்கிடையே ஒருவகை தொடர்பு இருப்பதைக் கண்டுணர்ந்த அவர், 72 மொழிகள் வரை கற்றுப் புலமை பெற்றார்.

சொற்பிறப்பு ஒப்பியல் அகர வரிசை என்ற பெயரில் இவர் வெளியிட்ட தமிழ் ஒப்பியல் அகராதி சிறந்த நூலாகும்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

## இலங்கையில் பங்குச்சந்தையில் ஏற்பட்ட சரிவின் பின்னணிகள்

முன்பக்கத் தொடர்ச்சி..

அரச நிறுவனங்கள் பங்குகளை வாங்கிக்கொண்டு போகும்போது பங்குகளை விற்கும் நிறுவனத்தின் பங்குகளின் விலை திடீரெனச் செயற்கையாக உயர்கிறது. இந்தச் செயற்கையான உயர்வை நம்பிப் பங்குகளை வாங்கும் சாமானியர்கள் இதனால் நட்டமடைகிறார்கள். கூடவே அரசு வாங்கும் பங்குகளின் விலை திடீரென வீழ்ச்சியடையும் போது, அரசின் பணமாக மக்களின் பணமே உள்ளதால் அந்த நட்டம் மக்கள் மீதே வந்து விழுகிறது.

எடுத்துக்காட்டாக, ஊழியர் சேமலாப நிதியமானது பங்குகளை வாங்கி நட்டப்பட்ட நிலையில் அது இலங்கையின் உழைக்கும் மக்களது பணத்துக்கே நட்டமாக அமைந்தமையைக் குறிப்பிடலாம்.

அரசு பங்குகளை வாங்குவதிலும் விற்பதிலும் நட்டப்படுவதிலும் அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகளும் பங்கை விற்கும் நிறுவனங்களும் சூழ்ச்சியிலும் ஊழல்களிலும் ஈடுபடுகின்றனர்.

நிறுவனங்களின் பங்குகளை மக்கள் வாங்கினால் நிறுவனத்திடமிருந்து பங்கு இலாபம் வழங்கப்படவேண்டும். ஆனால் பொய்யாக நட்டக்கணக்குக் காட்டி பங்கு இலாபத்தைக் கொடுக்காமல் பல நிறுவனங்கள் மக்களை ஏமாற்றுகின்றன.


பங்குச்சந்தையில் தாம் ஏமாற்றப்படுவதை உணர்ந்து பலர் வெளியேறினாலும், தம்மைப் பாதுகாத்துக்கொண்டாலும், பங்கு வாங்குபவர்களை ஏமாற்றுவதைக் குறிக்கோளாகக்கொண்டு இயங்கும் நிறுவனங்களிடம் அகப்பட்டுப் பணத்தை இழப்பதற்கெனப் புதிதாகப் பலர் வந்தவண்ணமே இருப்பார்கள். இவர்களை "மந்தைகள்" என்ற சொல்லால் குறிக்கிறார்கள்.

"பங்குச்சந்தையில் தாம் ஏமாற்றப்படுவதை உணர்ந்து பலர் வெளியேறினாலும், தம்மைப் பாதுகாத்துக்கொண்டாலும், பங்கு வாங்குபவர்களை ஏமாற்றுவதைக் குறிக்கோளாகக்கொண்டு இயங்கும் நிறுவனங்களிடம் அகப்பட்டுப் பணத்தை இழப்பதற்கெனப் புதிதாகப் பலர் வந்தவண்ணமே இருப்பார்கள். இவர்களை "மந்தைகள்" என்ற சொல்லால் குறிக்கிறார்கள்."

மலையகத்தில் பல தோட்டக் கம்பனிகள் தமது தொழிலாளர்களுக்குத் தமது கம்பனியின் சில பங்குகளை வழங்கியுள்ளன. இப்பங்குகளுக்கான சான்றிதழைப்பெற்றுக்கொண்ட தொழிலாளர்கள் அது என்ன என்றே தெரியாமல் வீடுகளில் அவற்றை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். தற்போது இவ்வாறான சான்றிதழ்களை அரசு நிறுத்தியிருக்கிறது.
உண்மையில் அத்தொழிலாளர்கள் தரகர் எவரிடமாவது சென்று தமக்குக் கணக்கொன்றினை உருவாக்கி அங்கே தமது பங்குகளை வைத்து பங்குச்சந்தை வியாபாரத்துக்குள் தம்மை இணைத்துக்கொள்வதன் மூலமே பணம் பெற முடியும். இவற்றைச் செய்வதாயின் தமக்கு வழங்கப்பட்டுள்ள பங்குகளின் பெறுமதியிலும் பார்க்க அதிகமாக அத்தொழிலாளர்கள் செலவழிக்க நேரும். சாதாரணமாக அடையாள அட்டை விண்ணப்பங்களை நிரப்புவதற்கே மற்றவரின் தயவை எதிர்பார்க்கும் நிலையில் உள்ள அத்தொழிலாளர்களுக்கு இது சாத்தியமான ஒன்றாகவே இல்லை. மொத்தத்தில் தோட்டக்கம்பனிகள் அத்தொழிலாளர்களுக்குத் தாம் வழங்க வேண்டிய பணத்துக்குப் பதிலாக அவர்களுக்குப் பயனற்ற வெறும் காகிதத்தை வழங்கி ஏமாற்றியுள்ளன என்பதே உண்மை.

பங்குச்சந்தை என்பது பல்வேறு மோசடிகளும், ஊகவணிகங்களும் அரசியல் செல்வாக்குகளும் கொண்டு பெரிய பெரிய பணக்காரர்கள் சூதாடும் இடமாக மாறிப்போயிருக்கிறது என்பது உண்மையாகும். இதில் கவனத்துடன் பங்குச்சந்தைப்போக்குகளை அவதானித்துத் தம் பணத்தைப் போட்டு எடுக்கக்கூடிய வல்லமை உள்ள தனி நபர்களும் இலாபம் ஈட்ட முடியும். ஒரு சில நிறுவனங்களின் பங்குகளைத்தவிர ஏனைய நிறுவனங்களின் பங்குகளுக்கெல்லாம் இதுதான் நிலை. இவ்வாறான ஒரு சூழ்நிலை இருக்கும்போது பங்குச்சந்தை என்பது ஒரு சூதாட்ட விடுதிபோன்றெ தோற்றமளிக்கிறது என உரையாடலில் கலந்துகொண்ட சிலர் கருத்துச் சொன்னார்கள். அவ்வாறில்லை என்றும், பங்குச்சந்தை நீதியாய் இயங்கும் நிலையில் அது நல்லதொரு முதலீட்டு வாய்ப்பாக அமையவும் கூடும் என்றும் வேறு சிலர் கருத்துச் சொன்னார்கள்.




Cartoon : Awantha Artigala

### உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும்

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

1. உலக வங்கி, சர்வதேச நாணய நிறுவனம் என்பனவற்றின் தோற்றம்
2. அவற்றின் நோக்கம்
3. நிதி மூலதன வேலைகள்
4. மூன்றாம் உலக நாடுகளிலும் வறிய நாடுகளிலும் அவர்களின் இயக்கம்.
5. அரசுகளிடம் அவர்களின் வேலைகள்
6. பொருளாதாரத்தில் இந்த நிறுவனங்களின் பங்கு எவை

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA